# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை
மற்றும்
முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்
இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

**UGC sponsored two day National Seminar on**
**HUMAN RIGHTS IN TAMIL LITERATURE**



பதிப்பாசிரியர்
முனைவர் க. முருகேசன்

157. *Dr. T. Muraleeswari* 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. ***கி. சுப்பிரமணியன்*** 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. ***அ. ராஜி*** 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. ***சு. மலர்விழி*** 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. ***முனைவர் வெ. சுகந்தா*** 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. ***முனைவர் பா.வேலம்மாள்*** 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. ***முனைவர் மொ. இரவிக்குமார்*** 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. ***முனைவர் இரா. மணிமேகலை*** 744
ஐவகை மன்றத்து அமைதி

165. ***முனைவர் க. முருகேசன்*** 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. ***ஆ. நித்யா*** 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. ***ம. விவேக் பிரபு*** 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. ***முனைவர் க. பழனிவேல்*** 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. ***இரா. அபிமன்யு*** 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. ***முனைவர் சு. சதீஷ்குமார்*** 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. ***ச. மல்லிகா*** 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. ***மு. ஜெயலட்சுமி*** 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. ***முனைவர் ந. இரஞ்சன்*** 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. ***முனைவர் கு. முத்துக்குமார்*** 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 165. வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

முனைவர் க. முருகேசன்
தமிழ்த்துறைத்தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

புதின இலக்கியம் கடந்த ஒரு நூற்றாண்டு காலகட்டத்தில் தனித்துவம் மிக்கதாகத் தன்னை மலர்த்திக் கொண்டுள்ளது. இந்தியப் பாரம்பரியத்தின் பிரதிபலிப்பாகவும், பண்பாட்டின் சிகரமாகவும் மனித இனம் வெற்றி நடைபோடுவதற்கு இலக்கியங்கள் மறைபொருளாக நின்று வழிகாட்டுகின்றன. படைக்கப்படும் எந்த ஒரு இலக்கியமும் சமுதாய நலன் கருதியதாகவே இருக்க வேண்டும் என்னும் உயரிய நோக்கின் அடிப்படையில் இன்றைய புதின உலகம் தன்போக்கில் நடைபோடுகின்றது. ஒரு நாட்டின் தலைஎழுத்தையே மாற்றி அமைக்கும் வலிமை எழுத்திற்கு உண்டு. ஆதலால், இலக்கியப் படைப்பாளியும் ஒரு வகையில் இறைவனாகவே கருதப் படுகின்றான். இத்தகைய கருத்தாக்கத்திற்குத் தன்னை களமாக்கிக் கொண்டவர் கவிஞர் வைரமுத்து. மரபில் முளைத்துப் புதுமையில் பூத்துக்குலுங்கும் கவிப்பேரரசு வைரமுத்து கவிதைகளில் மட்டும் பொலிவூட்டவில்லை. புதின இலக்கியத்தின் பக்கங்களிலும் வைரமாகவும் முத்தாகவும் ஒளிவீசுகின்றார். அவருடைய இரட்டைப் புதினங்களாகக் கருதப்படுகின்ற கள்ளிக் காட்டு இதிகாசமும் கருவாச்சி காவியமும், வேளாண்மை சார்ந்த மண்ணின் மைந்தர்களாகத் திகழும் வாசகர்களைக் கண்கலங்க வைக்கும் ஆளுமை கொண்டவை. பெண்மை என்பது காலங்களைக் கடந்து தன்னையும் தன்னுடைய பேராற்றலையும் வெளிப்படுத்திக் கொண்டுள்ள இந்த நூற்றாண்டில் பெண்மையின் வலிமையைப் பறைசாற்றும் ஒரு ஒப்பற்ற காவியமாகக் கருவாச்சி காவியத்தைப் படைத்தளித்துள்ளார். இப்புதினத்தில் இயற்கை பேசுவதாகவும், அஃறிணை உயிரினங்கள் பேசுவதாகவும் உத்திமுறைகளைக் கையாண்டு புதினத்தின் கதைப் போக்கிற்கும், கதைமாந்தர்களின் படைப்பியல் ஆளுமை வெளிப்பாட்டிற்கும், உரிமைகளைச் சுட்டுவதற்கும் களம் அமைத்துள்ளார். அவ்வாறான வித்தியாசமான உத்திமுறைகளைப் புலப்படுத்திக் காட்டி, அதன் மூலமாகப் புதினத்திற்குக் கிடைத்துள்ள தனித்தன்மையை உணர்த்திக் காட்டுவது இவண் நோக்கமாகின்றது.

## கதைக்களமும் உரிமை உரைத்தலும்

"புனையப்படாத நாவல்தான் வாழ்க்கை: புனையப்பட்ட வாழ்க்கைதான் நாவல். கெட்டியான கண்ணீரும், பச்சை ரத்தமும்,